

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் தமது சொந்த கிராமத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலை யொட்டி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் தமது குடும்பத்தினருடன் தேவனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்தார். உடன் சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், எஸ்.எஸ். காயத்திரிதேவி சிவசங்கர், எஸ்.எஸ். சிவகுமார், எஸ்.எஸ்.விசாலாட்சி சிவகுமார் ஆகியோர் ஜனநாயக கடமை ஆற்றினார்கள்.



சேலம் வடக்கு சட்டமன்ற கழக வேட்பாளர். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் தனது குடும்பத்தினருடன். சி எஸ்.ஐ பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு சாவடியில் வாக்களித்தார்.



திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் இ.பெ. செந்தில்குமார் தனது மனைவி மெர்சி செந்தில்குமாருடன் தனது வாக்கை பதிவு செய்தார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் கழக வெற்றி வேட்பாளர் வசந்தம் க.கார்த்திகேயன் அவரது மனைவியுடன் தனது சொந்த ஊரான தியாகதுருகம் அருகே உள்ள சாத்தனூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்கு செலுத்தி ஜனநாயக கடமையை ஆற்றினார்.



மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள அரசு பள்ளியில் குடும்பத்தினருடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் கதிர்ஆனந்த் எம்.பி. குடும்பத்தினருடன் காட்பாடி காந்தி நகரில் உள்ள டான்பாஸ்கோ பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.



சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சிட்டாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கார்த்தி, சிதம்பரம் எம்.பி. மற்றும் திருமதி ஸ்ரீநிதி அவரது புதல்வி ஆகியோருடன் வாக்கினை பதிவு செய்தார்.



தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தென்னங்குடியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்களித்தார்.



தஞ்சாவூர் கூட்டுறவு காலணியில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் தஞ்சை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் சண்.இராமநாதன் குடும்பத்தினருடன் வாக்களித்தார்.



மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேப்பந்தட்டை அரசு துவக்கப்பள்ளியில் வாக்கு செலுத்தினார்.

## வேதாரண்யம் மா.மீ.புகழேந்தி சித்தப்பா

## சிங்கப்பூர் கவிஞர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் மறைவு!

நாகை, ஏப்.25-

நாகை மாவட்டம் வேதாரண்யம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த மா. மீனாட்சிசுந்தரம் சகோதரரும், வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளரும், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.மீ. புகழேந்தியின் சித்தப்பாவும் சிங்கப்பூர் பிரபல தமிழ் இலக்கியவாதியும், சிங்கப்பூர் கவிமாலை அமைப்பின் காப்பாளருமான புதுமைத்தேனீ மா. அன்பழகன் உடல்நலக்குறைவால் 22.4.2026 அதிகாலை சிங்கப்பூரில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில், 1971ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். மனறந்த புதுமைத்தேனீ மா.அன்பழகனாருக்கு மனைவி திலகவதி அன்பழகன்

மகன்கள் செல்வம் அன்பழகன் ராமையா ஆகியோர் உள்ளனர்.

## சிங்கப்பூர் கவிஞர்

# புதுமைத் தேனீ மா.அன்பழகன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஏப். 25 -

சிங்கப்பூர் கவிஞர் புது மைத் தேனீ மா.அன்பழகன் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி விடுத்துள்ளார்:

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

சிங்கப்பூர் கவிஞர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

மா.அன்பழகன் அவர்கள், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் மூன்று முறை உறுப்பினராக இருந்த 'மா.மீ' என்றழைக் கப்படும் நினைவில் வாழும் மா.மீனாட்சி சுந்தரம் அவர்களின் அன்புத் தம்பியும், தற்போதைய வேதாரண்யம் வேட்பாளர் தம்பி புகழேந்தி அவர்களின் சிற்றப்பாவும் ஆவார்.

கழக இலக்கிய அணியின் மாநிலப் பொருளாளராக ஆறு ஆண்டுகள் பணி யாற்றிய அவர், பின்னர் கடந்த 32 ஆண்டுகளாக சிங்கப்பூரில் வாழ்ந்து வந்ததோடு, சிங்கப்பூரின் கவிமாலை அமைப்பின் காப்பாளராகவும் செயலாற்றி இலக்கியப் பணிகளைக் கவனித்து வந்தார்.

அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும் சிங்கப்பூர் இலக்கியக் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள்:

# மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாக்களித்தனர்!

## காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் தகவல்!

சென்னை, ஏப். 25-

சென்னையில் வாக்கு பதிவு மையத்தில் மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாக்களித்தனர் என்று, காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக் தெரிவித்துள்ளார். தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சென்னை பெருநகர காவல் எல்லையில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் பொதுமக்கள் தடையின்றி வாக்களிக்கும் வகையில் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து சென்னை பெருநகர காவல்துறை செய்துள்ளனர். குறிப்பாக சென்னையில் பதற்றமாக வாக்கு சாவடிகளை அடையாளம் கண்டு துணை ராணுவ வீரர்கள் உதவியுடன் போலீசார் பாதுகாப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

வாக்காளர்கள் எளிமையாக வாக்கு அளிக்கும் வகையில் காவல்துறை பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது. ராணி மேரி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சென்னை போலீஸ் கமிஷனர் அபின் தினேஷ் மோதக் நேரில் பார்வையிட்டார். அப்போது வாக்கு எண்ணிக்கை மையத்தை சுற்றி செய்யப்பட்டுள்ள சிசிடிவி உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அங்கு பணியில் இருந்து காவல் துறை அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

பிறகு பாதுகாப்பு பணியில் உள்ள போலீசாருக்கு உணவு மற்றும் உள்ளிட்ட பொருட்கள் தடையின்றி கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்தார்.



திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் கோவில்வழி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சு. வேலுசாமி

### ஏப்ரல் 25 (2018)



தனது இளமைப் பருவம் காலந்தொட்டே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கோவை மாவட்டம், தடாகம் ஊராட்சியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழக சீரணிப் படையிலும், பின்னர் தடாகம் கிளைக் கழகச் செயலாளராகவும், கிளை அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட 'நீதிகேட்டு நெடிய பயணத்தில்' அவருடன் கலந்து கொண்டவர்.

மிசா சட்டத்தின் கீழும் – சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.